ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

==========================================================

**சாதியும் இலக்கியமும் - அரங்கநாதனின் ஒரு நூற்றாண்டு விழா சிறுகதையை முன்வைத்து..**

==========================================================

**முனைவர் ஏ. சைலஜா**

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

தூய நெஞ்சக்கல்லூரி (தன்னாட்சி)

திருப்பத்தூர் – 635601.

==========================================================

**முன்னுரை**

சிறுகதை என்பது தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்ற பழைய வரையறை இறந்துபோன ஒரு காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அது முழுவதும் கற்பனை அல்லது கதை என்று ஒதுக்குவதற்கும் இல்லை; முழுவதும் எதார்த்தம் என்று அப்பிக் கொள்வதற்கும் இல்லை. வாழ்வியக்கங்கள் குறித்த பலவித பார்வைகளையும் அனுபவங்களையும் வாசிக்கும்தோறும் வாசிப்பாளருக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பது. நாகரத்தினம் கிருஷ்ணா அவர்கள் “சிறுகதைகள் என்பது நீதிக்கதைகள் அல்ல,

நீளம் சார்ந்தும் தீர்மானிக்கப்படுவதல்ல ஒரு கவிதைக்குரிய நேர்த்தியும், வார்த்தை சிக்கனமும் சொற்தேர்வும் நீர்ப்பரவல் போன்ற எடுத்துரைப்பும்“ (நாகரத்தினம் கிருஷ்ணா, 57) கொண்டவை என்கிறார். அரங்கநாதனின் சிறுகதை அதுபோன்ற ஒன்றுதான்

திராவிட இலக்கியக் கூட்டங்கள் மேடைக் கலாச்சாரத் தமிழ் என்ற ஒரு வகைமையை உருவாக்கி வளர்த்தது. அது தமிழின் இலக்கியத் தன்மையான உரையாடலை முற்றிலும் விலக்கியது மட்டுமல்லாமல் வித்தியாசமாகப் பேசுவதும் மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதும் சுய தம்பட்டம் அடித்துக்கொள்வதும் தமிழின் ஆகச் சிறந்த செயலாக மாற்றியது. இதன் தொடர்ச்சியாகப் பட்டி மண்டபம், விவாத மன்றம் போன்றவை தமிழை விற்பனைச் சரக்காக மாற்றியது சமூகக் கேடு. இந்த மேடைக் கலாச்சாரத்தில் சாதியத்தின் பங்கும் குறிப்பிடத்தக்கது. ஆனால் “இலக்கியம் நுகர்விற்கு எதிரானது” (ஜமாலன், 2021: 18). ஒரு கவிமாமணியின் நூற்றாண்டு விழா. அவ்விழாவில் அவரது இலக்கியப் பங்களிப்பைப் பேசாதவர்கள் உறவினராகவும் ஊர்க்காரராகவும் சாதியக்காரராகவும் இருக்கிறார்கள். அவரது இலக்கியப் பங்களிப்பைப் பேசுபவர் உறவினராகவும் ஊர்க்காரராகவும் சாதியக்காரராகவும் இல்லாதவராக இருக்கிறார். அது எப்படி சாத்தியமானது அல்லது இம்முரண் கதையில் ஏன் கட்டப்படுகிறது என்பதைக் இக்கட்டுரை ஆராய்கிறது.

**ஒரு நூற்றாண்டு விழா**

கவிமாமணி விநாயகமூர்த்தியின் நூற்றாண்டு விழா பட்டணத்தில் நடைபெறுகிறது. அதற்குக் காரணம் சாதியப் பின்புலமும் விளம்பரத் தன்மையும். சாதிச் சங்கம் நிறுவப்படுவதற்கான காரணம் ஒரு குறிப்பிட்ட சமூகம் மட்டும் அதன் பயனை அடைய வேண்டும் என்ற நோக்கம்தான். விழாவில் பேசுவதற்கு அழைக்கப்பட்டவர்கள் குறித்த நேரத்திற்கு வரவில்லை என்பதால் கவிமாமணி பற்றி அறிந்தவர்கள் பேசலாம் என்ற அறிவிப்பு தலைவர் (சிவலிங்கம்) மூலம் வருகிறது. ஒரு இலக்கியக் கூட்டத்திற்குப் பேச்சாளர் மிக மிக முக்கியம். ஆனால் நூற்றாண்டு விழாவில் பேச ஆளில்லை என்பதே அபத்தமான ஒரு போக்கு. முதலில் பேச வருபவர் ஆறுமுகப் பெருமாள். இவர் சித்தப்பாவின் பக்கத்துவீட்டுக்காரர் கவிமாமணி என்பது குறிப்பிடத்தக்கது. சிறுவயதில் கவிமாமணி பற்றி அறிந்தவராம். அவருடைய பேச்சு தோசை, ஆச்சி என நீண்டது. விழாவிற்கான உரை உணர்வுவயப்பட்ட ஒன்றாக மாறியதைக் காட்டுகிறது. இது

கவிமாமணியின் இலக்கியச் செயல்பாடு குறித்தது அல்ல. மேலும் அவர் நேரடி உறவினரும் அல்ல.

அடுத்து பரமார்த்தலிங்கம். இவரது மாமாவின் சொந்தக்காரர் கவிமாமணி. இவர் பேசும்போது கவிமாமணிக்கு வெற்றிலை வாங்கிய செய்தினைப் பகிர்கிறார். ஒரு படைப்பை நாம் நோக்கும்போது படைப்பாளன் இறந்துவிட வேண்டும். படைப்பு மட்டும் என்ன சொல்லுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அக்கண்ணோட்டம் படைப்பை அடுத்தக் கட்டத்திற்கு நம்மை இட்டுச் செல்லும். பரமார்த்தலிங்கம் வெற்றிலையோடு பீடியை வாங்கிவிட்ட செய்தி பகிரங்கமாக உடைக்கப்படுகிறது. மொத்தத்தில் விநாயகமூர்த்தியின் நூற்றாண்டுவிழா சாதி சார்ந்ததாகவும் உறவினர்களின் விழாவாகவும் அனுசரிக்கப்படுகிறது.

அடுத்து பரமசிவம். இவர் மற்ற இருவரைப் போலக் கவிமாமணியை நேரில் சந்தித்தவர் கிடையாது. இவரது அப்பாவோடு கூடப் படித்தவர் கவிமாமணி. தன் அப்பா தலைகீழாகத் திருக்குறளைச் சொல்லுவதைக் கவிமாமணி ரசிப்பதாகக் கூறுகிறார். அடுத்துத் தலைவர் சிவலிங்கம் வடை குறித்துப் பேசுகிறார். அடுத்து செந்தில் பெருமாள். இவர் வெளிநாட்டில் இருப்பவர். இவர் கவிமாமணி குறித்துச் சிறிதும் பேசாமல் அவர் வெளிநாடு சென்றதைக் குறித்துப் பேசுகிறார். ‘நம்ம பயலுக’ என்று பேசுவதும் அங்கு ஒரு சங்கம்கூட இருப்பதாகப் பேசுவதும் அவரது உரை இருக்கிறது. கவிமாமணி குறித்துப் பேசவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலே பேசிய இவர்கள் யாரும் நேரடி உறவினர் கிடையாது. கவிமாமணியின் படைப்புகள் குறித்து ஏதும் அறிந்திராதவர்கள். கவிமாமணி தன் சாதிக்காரர் என்பதால் அவரைக்கொண்டு தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். அந்தவகையில் இக்கதாபாத்திரங்கள் அனைத்தும் தற்கால இலக்கிய விழா நிகழ்வுகளைப் பகடித்தனம் செய்கிறது. இவர்கள் அனைவரும் பொருளாதாரம் பலம்கொண்ட மேற்தட்டு வர்க்கத்தினராகக் காட்சியளிக்கின்றனர். கதையில் பெரும்பான்மையான கதாபாத்திரங்கள் குறிப்பிட்ட அடையாளங்களாகவே படைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நூற்றாண்டு விழா சாதிபார்த்து நடைபெறுவது என்பது இலக்கிய வாசிப்பைப் பின்னுக்குத் தள்ளுகிறது. இப்பாத்திரங்கள் அனைத்தும் கவிமாமணியோடு

சாதி ரீதியாகத் தங்களை ஒட்டிவைத்துப் பார்க்கின்றனர். ஒட்டிவைத்தல் நுகர்வுத் தன்மைக்கு வழிவகுக்குமே தவிர ஆக்கப்பூர்வமான செயல்பாட்டிற்கு வழிவகுக்காது.

உடுப்பிக்கார போற்றி பாத்திரப்படைப்பு மிக முக்கியமானதாகும். போற்றி பிறப்பு அடிப்படையில் உயர் வர்க்கத்தினராக இருந்தாலும் அவனிடம் ஒருவிதமான போராட்டகுணமும் சிந்திக்கின்ற ஆற்றலும் இருக்கிறது. காரணம் விளிம்புநிலை தொழில் (வடை விற்றல்) செய்பவனாக இருப்பதுதான். பருப்பு விளைகின்ற இடத்தைப் பொருத்துச் சுவை மாறும் என்பது உடுப்பிக்கார போற்றியின் கருத்து. மனிதர்களும் அவரவர் சூழலியலுக்கு ஏற்ப சமூக அறிவினைப் பெற்றிருப்பர் என்ற கருத்தைக் கூறுகிறது. முத்துக்கறுப்பனோ சாதாண வெற்றிலைக்கடை வைத்திருப்பவன். அவன் ஒரு இறப்புக்குச் செல்லும்போது, கவிமாமணியின் வரிகள் மனத்தில்தோன்றி ஒரு மாற்றத்திற்கு உட்படுகிறான். இதுதான் படைப்பின் செயல்.

தொடக்கத்தில் பேசிய உறவினர்களும் ஊர்க்காரர்களும் சாதியக்காரர்களும் இலக்கியப் பணியைத் தொட்டுப் பேசவில்லை. இலக்கியத்தைப் பேசிய முத்துக்கறுப்பனோ கவிமாமணிக்கு உறவுக்காரனோ ஊர்க்காரனோ சாதிக்காரனோ கிடையாது. அச்செயல் படைப்பை உயிர் பெற வைக்கிறது அடுத்தக்கட்டத்திற்கு நகர்த்துகிறது. படைப்பாளன் எழுதிய கவிதை சமூகத்தோடு வினையாற்றுகிறது. இங்குத் தீண்டத்தகாதவனாக இருக்கின்ற முத்துக்கறுப்பனின் அறிவார்ந்த சிந்தனை படைப்பை வளர்த்தெடுக்கிறது. உறவினர்களாகிய மேற்தட்டு மனம் கொண்டவர்களின் கருத்து கவிமாமணியின் படைப்பைப் பின்னுக்குத் தள்ளுகிறது. உறவினர்கள் படைப்பாளியின் தோசை, வடை.... ஆகியவற்றோடு உறவாடும்படியிருக்கின்றனர். ஆனால் கவிமாமணியின் படைப்போடு உறவாடவில்லை. அதனால்தான் நூற்றாண்டுவிழா வெற்றுப்பேச்சாக மாறியமையை அரங்கநாதன் சித்திரித்துள்ளார்.

முத்துக்கறுப்பனை ஆறுமுகப் பெருமாள், 'யார் இவனை உள்ளே விட்டது' எனக் கேட்டல் என்பது சாதி அறிவார்ந்த சிந்தனையுடையவனை ஒதுக்கும் என்பதற்கான அடையாளமாகும். முத்துக்கறுப்பனை அறிமுகப்படுத்தியவர் மைக் செட்காரன். ஆக மைக் செட்காரன், வடை விற்கும் உடுப்பிக்காரப் போற்றி, வெத்தலைக் கடைக்கார முத்துக்கறுப்பன் ஆகியோர் உதிரிகள். அதேநேரம் உழைக்கும் வர்க்கத்தினர். அவரவர்

தொழிலில் திறன் படைத்தவர். என்றாலும் முத்துக்கறுப்பனோ கூடுதலாக வாசிப்புக் குணம் கொண்டவராக இருக்கிறார். கவிமாமணியோடு இவர்கள் தங்களை ஒட்டிவைத்துப் பார்க்கவில்லை. அகன்று நிற்கின்றனர். அகன்று நிற்றல் என்பது படைப்பாக்க மனத்தை இயங்க வைக்கும். அதனால்தான் உடுப்பிக்கார போற்றி பருப்பின் இயல்பு என்ற வகையில் நிலம்சார் அறிவையும் மைக்செட்காரன் யாரை எங்கே பொருத்தமானவர் என்பதை அறிந்து பொருத்தும் அறிவையும் (முத்துக்கறுப்பனைப் பேச வைத்தது) முத்துக்கறுப்பன் வாசிப்பின்வழி கவிமாமணி படைப்பின் வழியாகச் சிந்திக்கும் திறனையும் கொண்டவராக இருக்கின்றனர்.

கதையில் ஒரு முரண் உருவாக்கப்பட்டுள்ளது தெரிகிறது. அது சாதியநிலையோடு இயங்குதல் x சாதியநிலையற்று இயங்குதல் என்ற முரண் ஆகும். சாதிய நிலையோடு இயங்கும் கதாபாத்திரங்கள் ஒட்டிநிற்கும் பண்பு கொண்டவராகவும் சாதியநிலையற்று இயங்கும் பாத்திரங்கள் அகன்று நிற்கும் பண்பு கொண்டவராகவும் இருக்கின்றனர். அதன்மூலம் இலக்கியம் சாதிநிலையோடு உறவு கொண்டதல்ல என்ற கருத்து விதைக்கப்படுகிறது.

தலைவர், ஆறுமுகப் பெருமாள், பரமார்த்தலிங்கம், பரமசிவம், செந்தில் பெருமாள் ஆகியோர் கவிமாமணியோடு நேரடி உறவினர் கிடையாது. இருந்தாலும் தங்களை இணைத்துக்கொள்கின்றனர். இதைத்தான் தமிழவன் ‘உள்தொடர்பியல்’ (தமிழவன், 2023: 282) என்கிறார். இந்த உள்தொடர்பு சாதிய மனநிலை கொண்டவரிடத்தும் சினிமா ரசிகரிடத்தும் செயல்படும் என்றும் விளக்குகிறார். எங்கே இருப்பவர்களையும் அது இணைக்கும். ஒட்டும் பண்பு கொண்டமையால்தான் அது சாத்தியப்படுகிறது. ஒட்டி நிற்கும் பண்பு கொண்டவர்கள் கவிமாமணியின் படைப்பு குறித்து வாசித்திராதவர்கள். அதனால்தான், ஆச்சி, வடை, சங்கம் எனப் பேசுகின்றனர். இவர்களுடைய நோக்கம் தன்னைக் கவிமாமணியுடன் இணைத்துவிட வேண்டும் என்பதுதான். அங்கு இலக்கியமோ சாதியிலிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டு நிற்பது வெளிப்படை.

சாதியநிலையற்று இயங்கும் உடுப்பிக்கார போற்றி, மைக் செட்காரன், வெற்றிலை கடைக்காரன் ஆகியோர் கவிமாமணியின் உறவினர் கிடையாது. இவர்கள் உழைக்கும் வர்க்கத்தினராக இருக்கின்றனர். உழைக்கும் வர்க்கம் உழைப்போடும் சிந்தனையோடும்

தங்களை இணைத்துக்கொள்கிறது. போற்றியும் மைக் செட்காரனும் கவிமாமணி நிகழ்வில் உழைப்பால் இணைகின்றனர். முத்துக்கறுப்பன் கவிமாமணியின் படைப்புச் சிந்தனையால் இணைகின்றார். இச்செயல் கவிமாமணி என்னும் தனிநபருக்கும் இவர்களுக்குமான இடைவெளியினால் சாத்தியமானது. அதுதான் அகன்று நிற்றல். முத்துக்கறுப்பன் கவிமாமணி கவிதை குறித்துப் பேசும்போது, "கவிதை மனிதனை என்னவெல்லாமோ செய்யக்கூடும் என்று புரிந்துகொண்டேன். ஆனாலும், நான் கவிதையைப் புரிந்துகொண்டேன் என்று சொல்ல முடியாது. நமக்குப் புரிவதற்காகவா கவிதை எழுதப்படுகிறது" (அரங்கநாதன், 2024: 427) என்கிறார். முத்துக்கறுப்பன் கவிமாமணியிடமிருந்து மட்டும் அகன்று நிற்கவில்லை. கவிதையிடமிருந்தும் அகன்று நிற்கிறார். இது அவருக்குள் சிந்தனையைத் தருகிறது. அகன்று நிற்றல் படைப்பாக்கமாகிய சிந்தனையின் இடம். சாதியற்றவர்களாக இப்பாத்திரங்கள் இருப்பதற்கு அகன்று நிற்றலே காரணம். அகன்று நிற்றல் பண்பு கொண்ட, சிந்தனையுடைய வாசகரிடத்தும் இலக்கியம் தன்னைத் துண்டித்துக் கொண்டிருக்கிறது.

**முடிவாக**

கதையின் இறுதியில் இடம்பெறும் "அடுத்த கூட்டம் எப்போ" (மேலது.,) என்ற வரி, சாதியநிலையற்ற முத்துக்கறுப்பன் போன்றோர் விளிம்புநிலையில் அறிவார்ந்து உரையாடினாலும் சாதியநிலையுடையவர்கள் மைய நிலையில் இருந்துகொண்டு வழக்கம்போலச் செயல்படுவார்கள் என்பதைக் காட்டுகிறது. சாதியக்காரர்களாக இருந்தாலும் சாதியற்றவர்களாக இருந்தாலும் ஒட்டி நின்றாலும் அகன்று நின்றாலும் இலக்கியம் தன்னை மற்றவர் நுகர்வதற்கு அனுமதியாது. ஒட்டி நிற்றல்சார் தன்னிலை வேண்டுமானால் இலக்கியத்தை நுகர்வாக்கிக்கொள்ள அனுமதியும். ஆனால் அகன்று நிற்றலால் தன்னிலையும் அனுமதியாது. இலக்கியம் நுகர்வுக்கு எதிரானது.

**துணைநின்ற நூல்கள்**


- அரங்கநாதன், மா,2024, **மா. அரங்கநாதன் படைப்புகள்**, பரிதி பதிப்பகம், திருப்பத்தூர்.
- தமிழவன், 2023, **நவமார்க்சிய வழியில் திராவிடத் தமிழ்ச் சிந்தனைகள்**, எதிர் வெளியீடு, சென்னை.

❖ நாகரத்தினம் கிருஷ்ணா, 2014, **ஐரோப்பிய, அமெரிக்க தமிழ் இலக்கியம்**, தாயகம் கடந்த தமிழ், தமிழ்ப் பண்பாட்டு மையம், கோயம்புத்தூர்.

❖ ஜமாலன், 2021, **சொற்களால் நெய்யப்படும் உலகு**, நன்னூல் பதிப்பகம், திருத்துறைப்பூண்டி.